தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பிரபந்தாஸ்' 14

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேலாண்மைத் துறையானது ' பிரபந்தாஸ்' 14 என்னும் தேசிய அளவிலான வேளாண் மற்றும் மேலாண்மை போட்டிகளை நடத்தி வருகிறது. இவ்விழாவானது 2002ம் ஆண்டு முதல் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. இதனுடைய முக்கிய நோக்கம் மாணவர்களிடையே வணிகரீதியான பல்வேறு மேலாண்மை திறன்களை வளர்ப்பது ஆகும்.

பிரபந்தாஸ்' 14 வரும் நவம்பர் 28 மற்றம் நவம்பர் 29ம் தேதிகளில் காலை 10:00 மணியளவில் பல்கலைக்கழகத்தில் உள்ள அண்ணா கலையரங்கத்தில் நடைபெற உள்ளது.

| இளங்கலை போட்டிகள் | முதுகலை போட்டிகள் |
|---|---|
| விளம்பரம் செய் | உற்பத்தி மேலாண்மை போட்டி |
| வணிக கருத்துப் படைப்பு | மனிதவளப் போட்டி |
| வேளாண் வணிக வினாடி வினா | நிதி மேலாண்மை போட்டி |
| நொடியில் பேசு | விற்பனைப் போட்டி |
| புதையலைத் தேடு | சிறந்த மேலாளர் |

இப்போட்டியில் வேளாண்மை மற்றும் வேளாண் சம்பந்தப்பட்ட மேலாண்மை படிப்புகளை படிக்கும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள், வேம்னிகாம் பூனே, மத்திய வேளாண் பல்கலைக்கழகங்கள் நாம் (NAARM), மேனேஜ் (MANAGE) ஹைதராபாத், மற்றும் முதன்மை மேலாண் கல்லூரிகள் ஏ.எப்.எம்.ஐ (AFMI) மைசூர், கே.சி.டி (KCT), பி.எஸ்.ஜி.ஐ.எம் (PSGIM) போன்ற பல்வேறு கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்திலிருந்து இப்போட்டியில் பங்குபெற உள்ளனர். ஏறத்தாழ 250 மாணவ, மாணவியர்கள் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரபந்தாஸ்' 14 போட்டிகள் மாணவ மாணவியர்களின் மேலாண் திறமையை சோதித்துக் கொள்ளவும், வெளிப்படுத்தவும் மற்றும் மென்மேலும் வளர்த்துக் கொள்ளவும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும்.

பல்லவன் கிராமிய வங்கி, பாரத பாங்கு ஆப் இந்தியா, சின்டிகேட் வங்கி, சுகுணா புட்ஸ், நாத் பயோ-ஜீன், பரோடா வங்கி, இன்டிக்ரா மற்றும் ஸ்டேன்ஸ் போன்ற பல்வேறு துறைகளிலிருந்து இப்போட்டியினை சிறப்பாக நடத்த நிதி வழங்கி உதவி உள்ளனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்